RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s63

# மூர்க்க நாயனார் புராணம் வெளிப்படுத்தும் பண்பாட்டு நெறிகள்

**வீ. கவிதா [அ, *]**

[அ] முதுகலை மற்றும் தமிழ் உயராய்வு மையம், ஜி.டி.என். கலைக்கல்லூரி, திண்டுக்கல்-624005, தமிழ்நாடு, இந்தியா

# Cultural principles as expressed in the Murka Nayanar Puranam

**V. Kavitha [a, *]**

[a] Center for Postgraduate and Tamil Studies, G.T.N. Arts College, Dindigul-624005, Tamil Nadu, India

* Corresponding Author: vkavithagtn@gmail.com

Received: 19-09-2021
Revised: 06-04-2022
Accepted: 15-04-2022
Published: 11-06-2022

Check for updates

**ABSTRACT**

Tamil language has a very ancient history among Indian languages. Literatures in the Tamil language are also excellent factors in making that history better. Due to the proliferation of devotional texts in Tamil, the Tamil language is known as the "Language of Devotion". Saiva and Vaishnavism can be traced back to antiquity through the proverb of Tolkappiyar. Shaiva religion were revived by the Pallavas and the Cholas in the sixth century AD. During the reign of Raja Raja Chola, Nambiyandar nambi compiled the Tirupatikas in the Thillai temple into ten editions. He also added his own songs to the eleven editions. Then he added the great legend of the sekkilar and made it twelve times. The native name of the sekkilar is Arunmozhithevar. This is the twelfth edition of "Periyapuranam" composed by him. The name he gave to this book was "Thiruthondar Puranam". The history of vegetarians is proudly called the Great Myth. The coffee tells the story of 63 Nayans with beauty and devotion. Literature in the classical Tamil language is a portrayal of human life. Literature is a good guide to a happy life. There are many rare ideas in the literature about living in that genre. In this age where writing and speaking about individual rights tends to dismantle all of the bundles of fruitful traditions, there is now an increasing need to talk and write a lot about the responsibilities of every human being. There is no point in talking about the rights of those who shirk responsibilities. The number of crimes is likely to decrease only if individual morality is maintained in the federation of society. The fact that theft cannot be eradicated unless the thief is looked after is a testament to the fact that most prisons and prisons will be redundant if everyone in the country is disciplined in their adoption. This article examines family culture thinking, which takes precedence over individual morals, through the myth of the Murkanayanar.

**Keywords:** Tholkappiyam, Murkanayanar, Sangam Literature, Murka Nayanar Puranam

## முன்னுரை

இலக்கியம் என்பது காலக்கண்ணாடி இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் மிக நெருங்கியத் தொடர்பு இருந்து வருகிறது. அதாவது, வாழ்க்கையிலிருந்து தோன்றி வாழ்வையே தனக்குரியப் பொருளாகக் கொண்டு, அதனை வளப்படுத்துவதுதான் இலக்கியம். இதனால் தான் வரலாற்று மூலங்களுள் இலக்கியம் முக்கிய இடம் பெறுகின்றது.

அத்தன்மையில் பொருளால் தொடர்ந்து வரும் செய்யுள் இலக்கியமே காப்பியமாகும். இது தொடர்கதை நிகழ்ச்சிகளின் தொகுப்பாகிய தனி நூல். அந்நூலில் நிலம், கடல், மலை, திங்கள், நாடு

ஆகியவற்றின் வருணனை இருக்க வேண்டும். படலம், இலம்பகம், சருக்கம் போன்ற பல்வேறு பிரிவுகளை உடையதாய்ச் செம்மாந்த நடையில் திகழ வேண்டும். ஒண்பான் சுவைகளும் அமைந்து படிப்பவர்க்கு நலம் சேர்க்க வேண்டும். இவ்வனைத்து தன்மைகளும் பெரியபுராணத்தில் பொருந்தியிருப்பதைக் காணலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள மூர்க்க நாயனார் புராணம் காட்டும் வாழ்வியற் பண்பாட்டுக் கூறுகளை முதன்மைப் பொருளாகக் கொண்டு, அவ்வாழ்வியற் கூறுகளில் முதன்மையாகத் திகழும் பண்பாட்டைப் பற்றியும் அதன் உட்பொருளைப் பற்றியும் இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

## பெரியபுராணம் ஓர் உற்றுநோக்கல்

தமிழ்நாட்டில் ஒரு தனிப்புராணம் உலவுகிறது. அது "திருத்தொண்டர் புராணம்" ஆகும். அதற்குப் "பெரியபுராணம்" என்றொரு பெயரும் வழங்கப்படுகின்றது. அதைத் தமிழ்நாட்டு வரலாற்றுப் புராணம் என்றும் கூறலாம். சைவத்தின் முதல் தமிழ்க் காப்பியமான பெரியபுராணம் சேக்கிழாரால் பக்திச் சுவைக்கெனப் படைக்கப்பட்ட பைந்தமிழ்க் காப்பியம். காப்பியம் முழுக்க முழுக்க இச்சுவையே நிரம்பி வழிவதைக் காணலாம். சேக்கிழார், அடியார்களைப் பற்றி குறிப்பிடும் போது அவர்கள் அன்பே வடிவமானவர்கள் என்றும்,

மாசிலாத மணிதிகழ் மேனிமேல்

பூசுநீறுபோல் உள்ளும் புனிதர்கள்

என்றும் புகழ்ந்து போற்றுகிறார் (Bhanumathi Ramesh, 2011).

## நன்னெறிப்படுத்தும் சைவம்

உயிர்களைப் படைத்தும் காத்தும் அருளும் இறைவனின் இயல்பை மக்களால் முழுமையாக அறிய இயலாது. உயிர்கள் அடையும் இன்ப துன்பங்கள், உயர்வு தாழ்வு, பெருமை சிறுமை, ஏற்ற இறக்கம் ஆகியவற்றை மட்டுமே அறியும் நாம், நம்மை இயக்குகின்ற ஓர் ஆற்றல் இருப்பதை மட்டுமே உணர முடிகின்றது. இந்நிலையே கடவுள் நம்பிக்கைக்கு அடிப்படையாகும்.

உலகில் தோன்றியுள்ள பல சமயங்களும் மக்களிடம் அன்பு, அருள், அறம் போன்றவற்றையே வலியுறுத்துகின்றன. அவற்றுள் தொன்மை வாய்ந்தது இந்து சமயமே என்றும் சிவபெருமானையே முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமே சைவ சமயம் என்றும் போற்றப் படுகின்றன. அத்தகு சைவ சமயத்தின் பெருமைகளை, சித்தாந்த சிறப்புகளை,

சைவத்தின் மேற்சமயம் வேறில்லை. அதில்சார்

சிவமாம் தெய்வத்தின் மேல்தெய்வம் வேறில்லை

தற்சிவம் கண்டுளோர் சைவ சித்தாந்தமே

சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே

என்றெல்லாம் சைவத்தைச் சான்றோர்கள் புகழ்ந்துரைத்துள்ளனர் (Bhanumathi Ramesh, 2011). பழம்பொருளாக விளங்கும் சைவம் என்று தோன்றியது எனக் கூற இயலாது. சிந்து சமவெளியில் அகழ்ந்து எடுக்கப்பட்ட சிவலிங்கங்கள் சைவத்தின் பழமையினையும், பெருமையினையும் பறைசாற்றுகின்றன. நின்று நிலைத்து நித்தமும் புதுமை புரியும் சைவ சமயம் சாதி, இன, குல, பேதங்களைக் களையும் சமயமாகும். மனிதனால் செய்ய முடிந்த அறங்களையே வலியுறுத்தும். இனிய, பின்பற்றுவதற்கு எளிய, நன்னெறி காட்டும் தூய சமயமாக விளங்கும். சைவ சமயம் வளர்த்த துறைகள் பல. மொழி, சமயம், தத்துவம், இலக்கியம், வரலாறு, பண்பாடு, மனித வாழ்வியல் நுண்கலைகள் என்கின்ற பல்வேறுபட்ட துறைகளில் சைவம் தன் முத்திரையைப் பதித்துள்ளது.

## அடியார் தொண்டு

பக்தி இயக்கத்தின் விளைவாகச் சமயத்தின் காவலர்களாக நாயன்மார்கள் தோன்றினர். அவர்கள் சமயக் கருத்தைத் தம் சமுதாயப் பணிகள் மூலம் பரப்பினர். சமுதாயம் என்பது அடியார்களின் உள்ளுணர்வு வெளிப்பாடு என்றே கூறலாம். புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட இறை உணர்வை உணர்ந்து அனுபவிக்கும் பொழுது, வெளிப்பாடாகத் தோன்றும் மெய்ப்பாடுகளும் நடத்தைகளும் அவர்களின் சமய அனுபவத்தைக் காட்டுகின்றன.

சிவஞானபோதம் அதன் இறுதி நூற்பாவான பன்னிரண்டாம் நூற்பாவில் அடியார் பெருமையைப் பறைசாற்றுகின்றது. சிவனடியார்களைச் சிவனாகவே கருதிப் போற்றப் பணிக்கிறது.

பஜகோவிந்தத்தில் சங்கரர் அடியார் கூட்டத்தோடு இருப்பதே உறுதி பயப்பது என்கிறார் (Gopala Krishnan, 1990). ஏனெனில் நம்மனமாசு அகலவும், நாம் பெரும் இறையுணர்வு, பக்தி நிலைக்கவும் அடியார் கூட்டம் தேவையாகின்றது.

## பண்பாடு

பண்பாடு உள்ளத்தின் தொடர்புடையது. உயரிய பண்பாடுகள் உலகிற்கு என்றும் பொதுவானதாகும். பண்பாடு என்பது சமுதாயத்தில் உள்ள ஒரு மனிதனின் அறிவு, நம்பிக்கை, கலை, நீதி, சட்டம், பழக்கவழக்கங்கள் என்பவற்றைக் குறிப்பதாகும். பண்பாடு மக்களை மாக்களின்று பிரித்து உயர்த்துவதாகும். தமக்கென வாழாது பிறர்க்கென முயலுதலும், கிடைத்தற்கு அரிய அமுதமே கிடைப்பினும் தாமே உண்ணாது பிறருடன் கலந்து உண்ணுதலும், வாழ்வில் வெறுப்புற்று இருத்தலும், தாம் மேற்கொண்ட செயலில் அயர்வற்று இருத்தலும் ஆகியன உயர் பண்புடையாளர்க்குரிய இன்றியமையாத குணங்கள் ஆகும். எல்லோரிடத்தும் இனிமையாகப் பேசுவதும், இரப்போர்க்கு ஈவதும், இயன்றவரை பிறருக்கு உதவுவதும், கொள்கையும் மானமும் கெடின் உயிரை விடுவதும் பண்பாட்டுக் கூறுகளாகும். இக்கருத்தை ஆய்வோமானால் ஒன்றில் கூட பிறழாத வாழ்க்கை நடத்திப் பெரும் புகழ் பெற்றது தமிழினம் என்பதை,

ஈயென இறத்தல் இழிது

ஈயேன் என்பது அதைவிட இழிது

கொள்ளென கொடுத்தல் நன்று

கொள்ளேன் என்பது அதைவிட நன்று

என்ற பாடல் வரி உணர்த்துகிறது (Balasubramanian, 2004).

பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்

என்கிறது கலித்தொகை. பொதுவாக பண்பாடு மனித செயற்பாடுகளையும், சிறப்புத் தன்மைகளையும், முக்கியத்துவத்தையும் பிரதிபலிக்கிறது (Jeyabal, 2004). மேலும் பண்பாடு என்ன என்பதை விளங்கிக் கொள்ளும் இன்னொரு பொதுவான முறை மூன்று மூலங்களை உள்ளடக்கியுள்ளது. அவை,

1. பெறுமானம் (எண்ணங்கள்)
2. நெறிமுறைகள் (நடத்தை)
3. பொருட்கள்

என்பவையாகும். மேற்குறிப்பிட்ட மூன்று மூலங்களில் இரண்டவதாக இடம்பெற்றுள்ள நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது மூர்க்க நாயனார் புராணம்.

## மூர்க்க நாயனார்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொள்ளுதல், தன்னலத்தை அடியோடு துறந்துவிடுதல், பிறர்பொருட்டாக வாழ்தல், அச்சம் என்பதை வாழ்வில் இருந்து அகற்றுதல், தன் குறிக்கோளுக்காக உயிரை விடச் சித்தமாக இருத்தல் போன்ற நற்பண்புகளைக் கொண்ட மூர்க்க நாயனார் தொண்டை நாட்டில் திருவேற்காடு என்னும் ஊரில் தோன்றியவர் (Sasireha, 2021). சிவனடியார்களுக்கு அமுது செய்வித்த பின்பு தான் உணவு உண்பதை நியதியாகக் கொண்டவர். அடியவர் விரும்பும் பொருட்களை அளிப்பது இவர் திருத்தொண்டு. இதனால் இவர்தம் பொருட்செல்வம் குறையத் தொடங்கியது. எனவே சூதாடிப் பொருள் பெற்று அப்பொருளைக் கொண்டு அடியார்களுக்குத் திருதொண்டு செய்து வந்தார். இவ்வாறு சிலநாள் திருதொண்டு செய்து பின்பு சிவபிரான் திருவடிப்பேற்றினை அடைந்தார்.

## மூர்க்க நாயனார் பக்தியும் சமூகத் தொண்டும்

பக்தியை அன்றாடச் செயல்பாடுகளுடன் இணைக்காவிட்டால் அது பயனற்றுப் போகும் என்பதை நாயன்மார்கள் உணர்ந்து இருந்தார்கள். அவர்களது வழிபாட்டு நெறி வளர்ந்து பண்பட்டுச் சமயமாகி - பக்தியாகி, சமுதாயத்திற்கு பயன்படும் நெறியானது. உயிர்க்குலத்துக்கு பணிபுரிவதன் மூலமாக இறைவன் அருளைப் பெற முடியும் என்பதை உணர்ந்த மூர்க்க நாயனாரும் சிவபெருமான் திருவடியைப் போற்றி வணங்கி

காதல் அடியார்க்கு அமுது ஆக்கி

அமுது செய்யக் கண்டுண்ணும்

முறைமையில் வழுவாது நியதி உடையவராய்ச் சிறந்து விளங்கினார் (Sekkilar, 2010).

## மூர்க்கநாயனார் புராணம் வெளிப்படுத்தும் பண்பாட்டு நெறிமுறைகள்

நெறிமுறைகள் என்பன மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஆகும். ஒவ்வொரு பண்பாட்டுக் குழுவும் இந்தப் பொது வழக்கங்களை நடைமுறைப் படுத்துவதற்கான வழிமுறைகளைக் கொண்டுள்ளது. விருந்தோம்பல் முறை, பிறர் நலம் பேணல், உள்ள உறுதிப்பாடு போன்ற வழிமுறைகளை மூர்க்க நாயனார் புராணத்தின் மூலமாக விளங்கி கொள்ளலாம்.

## விருந்தோம்பல் முறை

தமிழரின் தொன்மை வாழ்வில் மிக முக்கியப் பங்கு வகிப்பது விருந்தோம்பல் பண்பு தான். இப்பண்பானது உயிர்களுக்கு ஆதரவளிக்கும் குணமாகக் கருதப்படுகிறது. குறிப்பாக தாராள மனதுடன் தேவையுள்ளோர்க்கு கவனிப்பையும், காருண்யத்தையும் மையப்படுத்தி செய்யப்படும் செயற்பாட்டை விளக்குகிறது. இச்செயற்பாட்டையே தனது உயிர் மூச்சாகக் கருதி முறையாக சிவனடியார்களுக்கு உணவளித்து அதன்பின் தாம் உணவு கொள்ளும் முறைமையில் வழுவாது ஒழுகினார் மூர்க்க நாயனார் என்பதை,

தூய அடிசில் நெய்கன்னல்

சுவைஇன் கறிகள் அவை அமைத்து

மேய அடியார் தமைப் போற்றி

விருப்பால் அமுது செய்வித்தே (Sekkilar, 2010)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. இவ்வுணர்த்துதல் தான் இக்காலச் சமூகச்சூழலில் சிக்கித் தவிக்கும் மானிடனுக்கு வழிகாட்டும் நெறியாக விளங்குகிறது.

## பிறர் நலம் பேணல்

“நித்தமும் பிறர்நலம் பேணல் நீங்காக் கடன்” என்று சாத்திரங்கள் பேசுகிறது. அச்சாத்திரங்களை ஓதுகின்ற சட்டநாதப் பட்டரும் அதனைத் தான் விரும்புகிறார். அவரது விருப்பத்தை சமூகத் தொண்டாக நினைத்து தமிழுக்கும் சமூகத்திற்கும் பணியாற்றி வந்தார் மூர்க்க நாயனார்.

அதாவது அடியவர்களுக்கு உணவளித்து திருத்தொண்டு செய்து வந்த நிலையில் பொருட்செல்வம் யாவும் குறைந்தது. இந்நிலையில் மூர்க்க நாயனார் தன்னிடம் இருந்த மிகுதியான விளை நிலங்களையும், ஏனையவற்றையும் விற்று அடியார்க்கு அமுது படைத்து பேரின்பம் அடைந்த தன்மையை,

மண்ணும் காணி யானநிலம்

மற்றும் உள்ள திறம்விற்றே

அன்னம் அளித்தே மேல்மேலும்

ஆரா மனத்தாற் ஆகினார் (Sekkilar, 2010)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. இதிலிருந்து நாம் கற்றுகொள்ளும் நெறிமுறை என்னவென்றால் தன்னலம் கருதாது பிறர் நலத்தை பேணுவதோடு, அவர்களுக்கு வேண்டிய பொருட்களை அன்புடன் உதவி, நாள்தோறும் அறச்செயல்களை செய்து வந்தால் வாழ்வு வளம் பெறும். நமது அடுத்த தலைமுறையும் சிறக்கும் என்ற படிப்பினையைக் கற்றுகொள்ளலாம்.

## உள்ள உறுதிப்பாடு

நாம் செயல்படுத்த விரும்பும் நற்காரியங்களில் வெற்றியடைவதற்கு பல தடைகள் பல ரூபங்களில் வரும். அவற்றையெல்லாம் தாண்டி நாம் நிகழ்த்த விரும்பும் அந்நற் காரியங்களை நிகழ்த்தி விட வேண்டும். இதற்கு உள்ளத்தில் உறுதியான நிலைப்பாடு வேண்டும். அந்நிலைப்பாட்டினை மூர்க்க நாயனாரின் சமூகத் தொண்டு வழி நாம் புரிந்து கொள்ளலாம். அவர் நாள்தோறும் அடியார்க்கு அமுது படைத்ததால் வறுமையுற்றார். அந்நிலையிலும் நாயனார் உறுதி பூண்டுள்ளதை உலகுக்கு காட்டும் வகையில் இருள்போன்ற கரிய கண்டத்தையுடைய சிவபிரானின் அடியவர்களுக்கு இனிய அமுதினை அளிப்பதற்காகப் பொருள் ஈட்டும் செயலுக்குப் புகழ் மேவும் கும்ப கோணத்தில் உள்ள பொது இடத்தில் உருட்டும் கருவி கொண்டு சூதாட்டம் ஆடி, அதனால் பெற்ற பொருள்யாவும் சிவபிரான் திருவருளாகவே கொண்டு ஆங்கு மகிழ்ந்தவராய் அவ்வடியவர்களுக்கு அமுது செய்வித்து இன்புற்றார். இச்செய்தியை,

உருள்ஆயச் சூதுஆடி

உறுபொருள் வென் றனநம்பர்

அருளாகவே கொண்டங்கு

அமுதுசெய்வித்து இன்புறுவார்

என்ற அடிகள் உணர்த்துகின்றன (Sekkilar, 2010)

## முடிவுரை

பண்பட்ட மனித சமுதாயத்தை உருவாக்க பக்தி இலக்கியங்கள் துணை நிற்கின்றன. சைவம் தமிழகத்தின் தொன்மைச் சமயமாகும். சைவ சமயம் முப்பொருள் கூறும் உண்மைச் சமயம். சைவ சித்தாந்தம் தமிழரின் சமய அறிவின் கொண்ட முடிவு எனலாம். நடமாடும் கோவிலாகிய அன்பர்களின் உள்ளத்தில், இறைவன் இருப்பதனால் அடியார் பணியே அருந்தவப் பணியாய் ஏற்றனர் அருளாளர்கள். அவ்வருளாளரில் ஒருவரான மூர்க்க நாயனாரும் சமுதாயம் நலம் பெறவும் வளம் பெறவும் தமிழ்த்தொண்டும், சமூகத்தொண்டும் ஆற்றினார். மூர்க்க நாயனார் நெறிப்படுத்திக் காட்டிய வாழ்வியற் பண்பாட்டுக் கூறுகளை நாமும் கடைபிடித்து வாழ்ந்தோமென்றால் இறையுணர்வாகிய சைவமும், இறை மொழியாகிய தமிழும், இறைவன் உகக்கும் சமூகமும் தழைத்தோங்கும். மனிதன் வாழ்க்கையில் சிறந்தோங்கி நலம் பெற வேண்டுமெனில் தனிமனித கடமைகளையும், ஒழுக்கங்களையும் மதித்து ஒழுக வேண்டும் என்ற கருத்து புலனாகிறது.

## References


Balasubramanian, K.V., (,2004) Purananuru, Paavai Publications, Thanjavur, India.

Bhanumathi Ramesh, (2011) Saivam Valartha Tamizh, New Century Book House, Chennai, India

Gnanasambandan, A.S., (1999) Periya Puranam oor aaivu, Gangai Puthaka Nilayam, Chennai, India.

Gopala Krishnan, R., (1990) Religion and Mysticism in the Periyapuranam, University of Madras, Chennai, India.

Jeyabal, R., (2004) Agananooru, Paavai Publications, Thanjavur, India.

Sasireha, P., (2021) Religious work of the Nayanmars who volunteered for the sacred offering of Food, International Research Journal of Tamil, 3(2), 78-86. https://doi.org/10.34256/irjt21211

Sekkilar, (2010) Periya Puranam, 4th Volume, Guhashri Vaariyaar Pathippagam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License